# தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு (டிட்டோஜேக்) மாநில அமைப்பு

- தேர்தல் கால வாக்குறுதிப்படி புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை இரத்து செய்து பழைய ஓய்வூதியத்திட்டத்தை தமிழக அரசு உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.
- ஊதிய இழப்பால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள இடைநிலை ஆசிரியர் ஊதிய முரண்பாடுகளைக் களைந்து மத்திய அரசுப்பள்ளி ஆசிரியர்களுக்கு இணையான ஊதியம் 01.06.2006 முதல் வழங்கிட வேண்டும்.
- மாணவர்களின் கல்வித்தரத்தைப் பாதிக்கும் எண்ணும் எழுத்தும் திட்டத்தை முற்றிலும் கைவிட வேண்டும்.
- EMIS - TNSED APP பதிவேற்றப் பணிகளில் இருந்து ஆசிரியர்களை விடுவித்து முழுமையாகக் கற்பித்தல் பணியாற்றிட அனுமதிக்க வேண்டும்
- அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கும் நலத்திட்ட உதவிகள் அனைத்தும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் விரிவுபடுத்திட வேண்டும்.
- முடக்கப்பட்ட சரண் விடுப்பு உரிமை மீண்டும் அனுமதிக்க வேண்டும், உயர்கல்விக்கான ஊக்க ஊதியம் பழைய முறையிலேயே தொடர வேண்டும்.
- தொடக்கக்கல்வித் துறைக்கு உட்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர், நேர்முக உதவியாளர் பணியிடங்களுக்கு வட்டாரக்கல்வி அலுவலர்களைப் பதவி உயர்வு, பணிமூப்பு அடிப்படையில் நியமித்திட வேண்டும்.

**என்பது உள்ளிட்ட 30 அம்சக் கோரிக்கைகளை**
**தமிழக அரசு நிறைவேற்ற வலியுறுத்தி**

# மாபெரும் கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம்

**நாள் : 13.10.2023 வெள்ளிக்கிழமை**
**நேரம் : காலை சரியாக 10.30 மணிமுதல் 2.00 மணிவரை**
**இடம் : DPI வளாகம், SCERT அலுவலகம் முன்பு, சென்னை**

**தலைமை**

**டிட்டோஜேக் மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர்கள்**

திரு. **செ.முத்துச்சாமி** Ex. MLC
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி

திரு. **அ.வின்சென்ட்பால்ராஜ்**
பொதுச்செயலாளர்
தமிழக ஆசிரியர் கூட்டணி

திரு. **ச.மயில்**
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **இரா.தாஸ்**
பொதுச்செயலாளர்
தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **சி.சேகர்**
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்க நடுநிலைப்பள்ளி
பட்டதாரி ஆசிரியர் சங்கம்

திரு. **வி.எஸ்.முத்துராமசாமி**
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **இல.தியோடர் ராபின்சன்**
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்

மன்றம் திரு. **நா.சண்முகநாதன்**
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்

திரு. **கோ.காமராஜ்**
பொதுச்செயலாளர்
தமிழக தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **சி.ஜெகநாதன்**
பொதுச்செயலாளர்
JSR தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **டி.ஆர்.ஜான் வெஸ்லி**
பொதுச்செயலாளர்
தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் சங்கம்

## முன்னிலை

### டிட்டோஜேக் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள்

திரு. **கே.பி.ரக்ஷித்**
மாநிலத்தலைவர்
தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி

திரு. **மா.நம்பிராஜ்**
மாநிலத்தலைவர்
தமிழக ஆசிரியர் கூட்டணி

திருமதி. **மூ.மணிமேகலை**
மாநிலத்தலைவர்
தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **ஆ.இலட்சுமிபதி**
மாநிலத்தலைவர்
தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **தே.ரமேஷ்பாபு**
மாநிலத்தலைவர்
தமிழ்நாடு தொடக்க நடுநிலைப்பள்ளி
பட்டதாரி ஆசிரியர் சங்கம்

திரு. **சு.குணசேகரன்**
மாநிலத்தலைவர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **பெ.இரா.இரவி**
மாநிலத்தலைவர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்

திரு. **இர.அண்ணாத்துரை**
மாநிலத்தலைவர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்

திரு. **அ.ஜோசப்சேவியர்**
மாநிலத்தலைவர்
தமிழக தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **டே.குன்வர்சோசுவாவளவன்**
மாநிலத்தலைவர்
JSR தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **இரா.தீனதயாளன்**
மாநிலத்தலைவர்
தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் சங்கம்

திரு. **பெ.பெரியசாமி**
மாநிலப் பொருளாளர்
தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி

திரு. **க.சந்திரசேகர்**
மாநிலப் பொருளாளர்
தமிழக ஆசிரியர் கூட்டணி

திரு. **ஜீ.மத்தேயு**
மாநிலப் பொருளாளர்
தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **பி.தியாகராஜன்**
மாநிலப் பொருளாளர்
தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **வ.முருகன்**
மாநிலப் பொருளாளர்
தமிழ்நாடு தொடக்க நடுநிலைப்பள்ளி
பட்டதாரி ஆசிரியர் சங்கம்

திரு. **சே.நீலகண்டன்**
மாநிலப் பொருளாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **முருக.செல்வராஜன்**
மாநிலப் பொருளாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்

திரு. **ஆ.கணேசன்**
மாநிலப் பொருளாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்

திரு. **அ.செல்வம்**
மாநிலப் பொருளாளர்
தமிழக தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **பெ.ஜேம்ஸ்**
மாநிலப் பொருளாளர்
JSR தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

திரு. **ப.ருக்மாங்கதன்**
மாநிலப் பொருளாளர்
தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் சங்கம்

## தமிழக அரசு நிறைவேற்ற வலியுறுத்தும் கோரிக்கைகள்

1. **புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் முற்றிலும் இரத்து செய்யப்பட்டு தேர்தல் கால வாக்குறுதிப்படி பழைய ஓய்வூதியத்திட்டத்தை தமிழக அரசு உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.**
2. **கடந்த 14 ஆண்டுகாலமாக இரண்டு ஊதியக் குழுக்களில் பாதிக்கப்பட்டுள்ள இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகள் சரிசெய்திட வேண்டும்.** தமிழ்நாடு முதலமைச்சராக மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றபின் இடைநிலை ஆசிரியர்கள் மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தைப் பெற்று வந்தார்கள். ரூ.610 அடிப்படை ஊதியம் பெற்றுவந்த இடைநிலை ஆசிரியர்கள் மத்திய அரசுக்கு இணையாக 5வது ஊதியக்குழுவில் ரூ.1200, ஆறாவது ஊதியக்குழுவில் மத்திய அரசுக்கு இணையாக ரூ.4500 ஊதியம் பெற்று வந்தார்கள். அதன்பின் அமைந்த ஊதியக்குழுவில் மத்திய அரசு இடைநிலை ஆசிரியர்களுக்கு Grade Pay ஆக ரூ.4200 நிர்ணயம் செய்து அறிவித்தது. ஆனால் மத்திய அரசின் பரிந்துரைகளை தமிழகத்தில் அமல்படுத்துவதற்காக தமிழக அரசால் நியமிக்கப்பட்ட ஊதிய மாற்றக்குழு இடைநிலை ஆசிரியர்களுக்கு ரூ.4200 ஆக நிர்ணயம் Grade Pay செய்வதற்குப் பதிலாக ரூ.1400 குறைத்து Grade Pay ரூ.2800 ஆக நிர்ணயம் செய்தது. இது இடைநிலை ஆசிரிர்களை வஞ்சிக்கும் செயலாக எண்ணி ஆசிரிய இயக்கங்கள் போராடிய நிலையில் தனி ஊதியமாக ரு.750 வழங்கப்பட்டு அதன்பின் ரூ.2000 ஆக உயர்த்தப்பட்டது. அந்த ரூ.2000க்கு அகவிலைப்படி ஊதிய உயர்வு சேர்க்கப்படவில்லை. மேலும் இடைநிலை ஆசிரியர் பணியில் ஊதியக்குறைவை ஈடுகட்ட வழங்கப்பட்ட தன் ஊதியம் ரூ.750 அதன்பின் ரூ.2000, பதவி உயர்வுக்கு சேர்க்கப்படாததால் இடைநிலை ஆசிரியர் துவக்கப்பள்ளித் தலைமை ஆசிரியராகவோ, பட்டதாரி ஆசிரியராகவோ பதவி உயர்வு பெறும் நேர்வில் கீழ்நிலைப் பதவியில் பெற்ற ஊதியத்தைவிடக் குறைவான ஊதியம் பெறும் நிலை ஏற்பட்டது. ஊதிய முரண்பாடுகளும் ஏற்பட்டது.

மத்திய அரசு இடைநிலை ஆசிரியர்களுக்கு இணையான ஊதிய மாற்றத்தினை தமிழகத்து இடைநிலை ஆசிரியர்களுக்கும் வேறுபாடின்றி 01.06.2006 முதல் நிர்ணயம் செய்திட வேண்டும். ஏற்கனவே 6வது ஊதியக்குழுவில் இடைநிலை ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியான ஊதிய முரண்பாடுகளை களைந்த பின்னர் புதிய ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். தமிழகத்தில் இடைநிலை ஆசிரியர்களுக்கு இருவேறுபட்ட ஊதிய விகிதத்தினை நடைமுறைப்படுத்தி வருவதை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு ஒரே கல்வித்தகுதி – சமவேலைக்கு சமஊதியம் என்ற நிலைப்பாட்டில் ஊதிய மாற்றத்தில் சமன் செய்திட வேண்டும். இடைநிலை ஆசிரியர்கள் மட்டுமல்லாது மத்திய ஆசிரியர்களுக்கு இணையான ஊதியம் தமிழகத்தின் அனைத்து நிலை ஆசிரியர்களுக்கும் கிடைக்கும் வகையில் ஊதியத் திருத்தம் செய்திட வேண்டும்.

3. தமிழ்நாட்டில் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் காலைச் சிற்றுண்டித் திட்டம், மருத்துவம் உள்ளிட்ட உயர்கல்வியில் தனி இட ஒதுக்கீடு, புதுமைப்பெண் திட்டம் உள்ளிட்ட அனைத்து நலத்திட்டங்களும் அரசு உதவிபெறும் பள்ளி, மாணவர்களுக்கும் வழங்கப்பட வேண்டுகிறோம்.

4. தமிழ்நாட்டில் ஆசிரியர்கள் பதவி உயர்வுபெற தகுதித்தேர்வு TET தேர்ச்சி பெற வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் அமர்வு 02.06.2023 அன்று தீர்ப்பு வழங்கியதன் நிலையில் தற்போது மூன்றாவது நீதிபதி அமர்வுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. தலைமை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுபெற ஆசிரியர்கள் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டியதில்லை என்பதை தமிழ்நாடு அரசு கொள்கை முடிவாக (Policy Decision) அறிவித்து பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு என்பதை நீதிமன்றத்தில் நிலை நிறுத்த வேண்டுகிறோம். இவ்வழக்கிற்கென தனி சிறப்பு வழக்கறிஞரை அரசுத் தரப்பில் நியமித்து வழக்கினை விரைவுபடுத்த ஆவண செய்திட வேண்டுகிறோம்.

5. தொடக்கக்கல்வித்துறையில் நடைபெற்ற 2022-2023 ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் பொதுமாறுதல் கலந்தாய்வில் பதவி உயர்வுக்கான கலந்தாய்வு இதுவரை நடைபெறாததால் 2000க்கும் மேற்பட்ட தலைமை ஆசிரியர் பணியிடங்களும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் காலியாக உள்ளன. மேலும், ஒன்றிய மாறுதல் மற்றும் மாவட்ட மாறுதல் கலந்தாய்வும் இதுவரை நடைபெறவில்லை. இதனால் தமிழ்நாட்டின் கல்வி நலன் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு பதவி உயர்வுக்கு தகுதித் தேர்வு தேவையில்லை என்று உறுதியான நிலைப்பாட்டை எடுத்து விரைந்து பதவி உயர்வு மற்றும் மாறுதல் கலந்தாய்வை நடத்திட வேண்டுகிறோம்.

6. **ஆசிரியர்களை கற்பித்தல் பணியாற்ற அனுமதிக்க வேண்டும் – EMIS பதிவேற்றப் பணிகளில் இருந்து விடுவிக்க கோரிக்கை** தொடக்கக்கல்வித்துறையில் 1 முதல் 8 வகுப்புகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடபோதனையில் முழுமையாக ஈடுபட இயலாத வகையில் தொடர்ந்து EMIS செயலியில் பல்வேறு விபரங்களைப் பதிவேற்றம் செய்யும் பணி வழங்கப்பட்டு வருகிறது. குழந்தை மையக் கல்வி என்பது இன்று எந்திரமயக் கல்வியாக மாற்றப்பட்டு விட்டது. இதனால் மாணவரின் கற்றல் அடைவு என்பது முழுமையடையாத வகையில் பாதிப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. கற்பித்தல் பணியில் ஈடுபட இயலாத காரணத்தால் ஆசிரியர்கள் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். கல்விப்பணி தவிர பிற பணிகளில் குறிப்பாக EMIS பதிவேற்றம் செய்யும் பணிகளில் இருந்து ஆசிரியர்களை முழுமையாக விடுவித்திட வேண்டுமாய்ப் பெரிதும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

7. **எண்ணும் - எழுத்தும் திட்டம் முழுமையாகக் கைவிட வேண்டும்.** ஆசிரியர்களுக்குத் தேவையற்ற பணிச்சுமைகளை ஏற்படுத்துவதோடு, மாணவரின் கல்வித்தரத்தினை பாழடிக்கும் எண்ணும்-எழுத்தும் திட்டத்தை முற்றிலும் கைவிட பெரிதும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். கொரோனா கால கற்றல் இடைவெளியைக் குறைப்பதற்காக உருவாக்கப்பட்ட இத்திட்டம் தற்போது மாணவர்களுக்கு ஏற்ற கல்வித்திட்டமல்ல என்பதை மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அனைத்து இயக்கங்களும் ஆதாரத்தோடு எடுத்துக் கூறியுள்ளோம்.

8. **CRC பயிற்சி - ஏதுவாளர்களாக ஆசிரியர்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்திட வேண்டும்** ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கும்போது வட்டார வளமைய ஆசிரியப் பயிற்றுநர்களே பயிற்சி ஏதுவாளர்களாக செயல்பட்டு வந்த நிலைமாறி தற்போது முற்றிலும் ஆசிரியர்களே பயிற்சிக்கான ஏதுவாளர்களாக செயல்படும் நிலை ஏற்படுத்தப்பட்டு உள்ளது. பள்ளிவாரியான தரவுகளைப் பதிவேற்றம் செய்யும் பணியில் ஈடுபட்டுவந்த ஆசிரியப் பயிற்றுநர்கள் தற்போது அப்பணியிலிருந்தும் விடுவிக்கப்பட்டு, ஆசிரியர்களே பதிவேற்றம் செய்யும் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். பயிற்சிக்கான ஏதுவாளர்களாகச் செல்லவேண்டியுள்ளதால் ஆசிரியர்களின் பள்ளிப்பணி, கற்பித்தல் பணி முழுவதும் பாதிக்கப்படுவதைக் கருத்தில்கொண்டு பயிற்சி ஏதுவாளர்களாக ஆசிரியர்களை ஈடுபடுத்துவதை முற்றிலும் கைவிட வேண்டும்.

9. **SMC - பள்ளி மேலாண்மைக்குழு கூட்டம் ஆண்டுக்கு 3 முறை மட்டுமே கூட்டிட வேண்டும்.** பள்ளி மேலாண்மைக்குழு கடந்த ஆண்டில் மாதம் ஒருமுறை கூட்டப்பட்டு வந்தது. சில மாதங்களில் இரண்டுமுறை கூட்டப்பட்டு வருகிறது. இதற்கென ஒரு ஆசிரியர்,ஒருநாள் முழுவதும் பெற்றோரை அழைப்பது, கூட்ட ஏற்பாடுகள் செய்வது உள்ளிட்ட பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது. மேலும் அடிக்கடி கூட்டப்படுவதால் கூலி வேலைக்குச் செல்லும் பெற்றோர் இக்கூட்டங்களில் பங்கேற்பதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே மாதம் ஒருமுறை என்ற நடைமுறையினை மாற்றியமைத்து ஆண்டுக்கு மூன்று முறை என்ற அளவில் SMC கூட்டங்களைக் கூட்டும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள பெரிதும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

10. கால காலமாக தமிழக அரசு ஊழியர்கள் பெற்று வந்த ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு உரிமையைக் கொரோனாவைக் காரணம் காட்டி கடந்த அரசு இரண்டு ஆண்டுகளுக்கு நிறுத்தி வைத்தது. ஆனால், இன்றைய அரசோ காரணமின்றி அதை நிரந்தரமாக நிறுத்தி வைத்துள்ளது. பறிக்கப்பட்ட ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு உரிமை மீண்டும் அனுமதிக்கப்பட வேண்டுகிறோம்.

11. 50 ஆண்டுகளுக்கும் மேலாக பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்காலம் முதல் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உயர்கல்விக்கான ஊக்க ஊதியம் கடந்த ஆட்சியில் பறிக்கப்பட்டது. தற்போதைய திமுக அரசு தனது தேர்தல் அறிக்கையில் கூறியதற்கு மாறாக உயர்கல்விக்கு ஊக்கத்தொகை என அறிவித்திருப்பது ஆசிரியர்களுக்கு கடும் பாதிப்புகள் ஏற்படுத்தியுள்ளது. எனவே, உடனடியாக ஆசிரியர்கள் பெறும் உயர்கல்விக்கு முன்பு போல் ஊக்க ஊதிய உயர்வு அனுமதிக்கப்பட வேண்டும். 10.03.2020க்கு முன்னர் உயர்கல்வி தகுதி பெற்றவர்களுக்கு உரிய நிதி ஒதுக்கீடு அனுமதித்து நிலுவைத் தொகையினை அரசாணைப்படி உடன் வழங்க வேண்டுகிறோம்.

12. அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பணி நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக நியமன ஒப்புதல் வழங்கப்படவில்லை. இதனால் அவ்வாறு நியமனம் பெற்ற ஆசிரியர்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. உடனடியாக நியமன ஒப்புதல் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறோம்.
13. தமிழக அரசு ஆசிரியர்களின் இன்றைய பணிச்சூழலைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்களுக்கான பணிப்பாதுகாப்புச் சட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுகிறோம்
14. தொகுப்பூதியத்தில் நியமிக்கப்பட்டு 01.06.2006 முதல் காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமன நாள்முதல் காலமுறை பணிக்காலமாகக் கருதி பணிவரன்முறை செய்திட வேண்டுகிறோம்.
15. தொடக்கக்கல்வித்துறையில் ஆசிரியர்கள் உயர் கல்வி பயின்றதற்கான பின்னேற்பு அனுமதி ஆணைகோரி அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாக கிடப்பில் போடப்பட்டுள்ளது. பின்னேற்பு அனுமதி ஆணைகள் வழங்கப்பட வலியுறுத்துகிறோம்.
16. தொடக்கக்கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் அனைத்து வகையான பயிற்சிகளுக்கும் கடந்த காலங்களில் வழங்கப்பட்டது போல் மதிப்பூதியம் வழங்கப்பட வேண்டும்.
17. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஏற்பட்டுள்ள தேவைப்பணியிடங்களில் மாணவர்களின் கல்வி நலன் கருதி உடனடியாக கூடுதல் ஆசிரியர்களை நியமனம் செய்திட வேண்டுமென வலியுறுத்துகிறோம்.
18. நிர்வாக வசதிக்காக பிரிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றியங்கள் மறுவரையறை செய்யப்பட்டதால் தற்போது வேறு ஒன்றியத்தில் அல்லது வேறு மாவட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கு சொந்த ஒன்றியத்தில் ஏற்படும் காலிப்பணியிடங்களுக்கு பணிமாறுதல் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறோம்.
19. கடந்த ஊதியக்குழுக்களில் தேர்வு நிலை, சிறப்பு நிலை பெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கு அனுதிக்கப்பட்ட சிறப்புப்படிகள் அனைத்தும் தொடர்ந்து அனுமதிக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறோம்.
20. தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் மருத்துவ சிகிச்சைகளுக்கு அரசாணைகளின்படி முழுக் கட்டணத்தையும் அளிக்காமல் காப்பீட்டு நிறுவனங்கள் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றன. காப்பீட்டு நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு கட்டணமில்லா சிகிச்சையை தமிழக அரசு உறுதிப்படுத்த வேண்டுமென வலியுறுத்துகிறோம்.
21. ஆசிரியர் தகுத்திதேர்வில் தேர்ச்சி பெற்றபின்பும், ஆசிரியர் பணிநியமனத்திற்கு போட்டித்தேர்வு எழுத வேண்டும் என்ற அரசாணை 149ஐ ரத்து செய்திட வேண்டுமென வலியுறுத்துகிறோம்.
22. ஆசிரியர்களின் அன்றாட கற்பித்தல் பணியைப் பாதிக்கும் வகையில் பல மாவட்டங்களில் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி நிலை அலுவலர் (BLO) பணியிலிருந்து மாணவர்களின் கல்வி நலன் கருதி உடனடியாக ஆசிரியர்களை விடுவிக்க வேண்டுமென வலியுறுத்துகிறோம்.
23. நடுநிலைப்பள்ளிகளுடன் இணைந்த 2381 அங்கன்வாடிகளில் LKG, UKG வகுப்புகளைக் கையாள முன்பருவ ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களை ஆசிரியர்களாக நியமித்திட வேண்டுமென வலியுறுத்துகிறோம்.
24. ஊராட்சிப்பகுதிகளில் உள்ள அரசுப்பள்ளிகளில் தூய்மைப்பணியாளர் நியமிக்கப்படுவது போல் பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அரசுப்பள்ளிகளிலும் நிரந்தரப் பணியிடத்தில் தூய்மைப் பணியாளர் நியமனம் செய்யப்பட வேண்டுமென வலியுறுத்துகிறோம்.
25. ஆசிரியர்கள் பயின்ற உயர்கல்விக்கான முன் அனுமதி பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை என்று காரணம் கூறி 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு முன்பே உயர்கல்விக்கான ஊக்க ஊதியம் பெற்றும், 10 அல்லது 15 ஆண்டுகளாக முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெற்றிருந்த ஆசிரியர்களை சில வட்டாரக்கல்வி அலுவலர்கள் காழ்ப்புணர்ச்சி மற்றும் பழிவாங்கும் நடவடிக்கைகளின் காரணமாக திட்டமிட்டே 01.01.2023 பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளனர். இது தொடர்பாக தொடக்கக்கல்வித்துறை உரிய விசாரணை மேற்கொண்டு, பணிப்பதிவேட்டில் பதிவு செய்யாதது அலுவலகத் தவறு என்பதைக் கணக்கில் கொண்டு பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு உரிய நீதி கிடைக்க ஆவண செய்திட கேட்டுக்கொள்கிறோம்.
26. அரசாணை நிலை எண் 23 நிதி (ஊதியப் பிரிவு) துறை நாள் 12.01.2011 தமிழ்நாடு அரசின் நிதித்துறைக் கடிதம் நாள் 05.01.2012 மற்றும் 14483/CMPC/2011-1 தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண் 13944/சி2/2019 ஆகியவற்றின்படி துவக்கப்பள்ளி ஆசிரியர்களின் தேர்வுநிலைக்கு அனுமதிக்கப்பட்ட ரூ.5400 தர ஊதியம் என்பது சரியானதாகும். ஆனால், சிறப்பு மற்றும் மண்டலத் தணிக்கைகளில் தணிக்கையாளர்கள் மேற்கண்டவாறு தேர்வுநிலைக்கு ரூ.5400 அனுமதிக்கப்பட்டதற்கு தணிக்கைத் தடை விதித்துள்ளனர். இவ்வாறான தணிக்கைத் தடைகள் முற்றிலும் அரசாணைகளுக்கு முரணானதாகும். எனவே, இத்தணிக்கைத் தடைகளை விலக்கிக்கொள்ள பொதுவான ஆணையொன்றை தொடக்கக்கல்வி இயக்குநர் வெளியிட வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.
27. தமிழ்நாடு முழுவதும் காலியாக உள்ள அனைத்துவகையான ஆசிரியர் பணியிடங்களையும் தொகுப்பூதிய அடிப்படையில் நிரப்பாமல், காலமுறை ஊதியத்தில் உடனடியாக நிரப்பிட தமிழ்நாடு அரசு விரைவு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.
28. பி.லிட்., பட்டம் பெற்று நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு பி.எட். கல்வித்தகுதிக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்க ஊதிய உயர்வு 2015 முதல் நிறுத்தப்பட்டுள்ளது. அதை மீண்டும் வழங்குவதோடு, ஏற்கனவே ஊக்க ஊதிய உயர்வு பெற்றவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தணிக்கைத் தடைகளை நீக்கி ஆணையிட வேண்டுகிறோம்.
29. தொடக்கக்கல்வித்துறையில் பணியாற்றும் பகுதி நேர சிறப்பாசிரியர்கள், மாற்றுத்திறனாளி குழந்தைகளின் சிறப்பு ஆசிரியர்கள் ஆகியோர்க்கு காலமுறை ஊதியம் வழங்கப்பட வேண்டுகிறோம்.
30. மாவட்டக்கல்வி அலுவலர்கள் (தொடக்கக்கல்வி) பணியிடங்களில் வட்டாரக்கல்வி அலுவலர்களுக்கே பணிமூப்பின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்க வேண்டும். மாவட்டக்கல்வி அலுவலக (தொடக்கக்கல்வி) நேர்முக உதவியாளர் பணியிடங்களும் நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அல்லது வட்டாரக்கல்வி அலுவலர்களுக்கு பணி மாற்றம் மூலம் நிரப்பிட வேண்டும்.

***கோரிக்கைகளை வென்றெடுக்க... ஆசிரியப் பேரினமே அணி திரள்வீர்...!***

இவண் **டிட்டோ-ஜாக், மாநில அமைப்பு**